## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.150/2018

2025 –ம் ஆண்டு நவம்பர் மாதம் 03 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் பி.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திருமதி. R. பானுபிரியா, Bench Clerk (Gr–III)/IC அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 03.11.2025**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திரு. ராஜகோபால் (DW–1 ) | வயது | : | 75/2025 |
| த/க பெயர் | : | திரு. அப்பாவு | தொழில் | : | விவசாயம் |
| முகவரி | | பரவாக்கோட்டை | வட்டம் | : | மன்னார்குடி |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

**1.** வாதி எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதிக்கு எனது கிராமத்தில் பல்வேறு வகையான நிலங்கள் உள்ளது என்றால் சரிதான், ஒரு வேலி நிலம் உள்ளது. 6 ஏக்கர் இருக்கும் என்றால் சரிதான். நீதிமன்றத்திலிருந்து கிடைக்கப்பெற்ற வழக்குரையை படித்து பார்த்தேனா என்றால் எனது மகனை விட்டு படித்து பார்த்து படிக்க தெரிந்துகொண்டேன். வாதியானவர் ஒரு ஏக்கர் 89 செண்ட் நிலம் சொந்தமென வழக்கு தாக்கல் செய்துள்ளாரா என்றால் சரிதான். வழக்கு சம்மந்தமான ஆவணங்கள் அனைத்தையும் நான் பார்த்தேன் என்றால் சரிதான்.

**2.** தாவா சொத்துக்களுக்கு வாதியின் பெயரில் பத்திரங்கள் உள்ளது என்றால் சரிதான். 3 அயிட்ட தாவா சொத்துக்களுக்கான பட்டா அனைத்தும் வாதி பெயரில் உள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களுக்கான புல வரைபடம் வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ளார்கள் என்றால் சரிதான். வா.சா.ஆ.5, வா.சா.ஆ.6 புல வரைபடத்தில் வாய்க்கால் உள்ளதாக குறிப்பிடவில்லை என்றால் சரிதான்.

**3.** தாவா சொத்து வாய்க்கால் உள்ளதுதான் எங்களது கட்சி என்றால் சரிதான். எந்த சர்வே எண்ணில் வாய்க்கால் உள்ளது என்றால் படிக்க தெரியாது என்பதால் எனக்கு தெரியாது. வாதிகள் தாவா சொத்தில் உள்ள வாய்க்காலை அழித்துவிட்டதால் நீதிமன்ற ஆணையர் நியமித்து பார்வையிட்டு அறிக்கை தாக்கல் செய்ய மனு கொடுத்தேனா என்றால் இல்லை. எனக்கு சொந்தமாக எவ்வளவு சொத்து உள்ளது என்றால் ஒரு வேலி நிலம் உள்ளது. வாதி சொத்துக்கு எந்த திசையில் எனக்கு சொத்து உள்ளது என்றால் மேல்புறம் 7 ஏக்கர் உள்ளது. எத்தனை சர்வே எண்ணில் அந்த 7 ஏக்கர் நிலம் உள்ளது என்றால் எனக்கு படிப்பறிவு இல்லை என்பதால் தெரியாது.

**4.** எனக்கும் வாதிகளுக்கும் நிலங்களில் சாகுபடி செய்வதற்கு எந்தவகையான பாசனம் உள்ளது என்றால் ஆற்று பாசனம். கல்லணை பாசனத்திலிருந்து எந்த வழியாக பாசனம் வருகிறது என்றால் தெரியாது. கிராமத்திற்கு ஆயக்கட்டு பதிவேடு உள்ள விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. ஆயக்கட்டு பதிவேட்டில் எங்களுக்கு எந்த பாசம் எந்த கால்வாய் வழியாக வரும் என்ற விபரம் குறிப்பிடப்பட்டுள்ளதால் அந்த பதிவேட்டினை பெற்று இந்த வழக்கை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.

**5.** நடராஜன் என்பவருக்கு எனது நிலத்திற்கு தென்புறமும், கீழ்புறமும் நிலம் உள்ளது என்றால் சரிதான். நடராஜன் சாகுபடி செய்யும் நிலமானது பழனிவேலிடமிருந்து கிரயம் பெற்றார் என்றால் சரிதான். பழனிவேல் சர்வே எண்.457/8 இருந்ததை நடராஜன் கிரயம் பெற்று சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரிதான். சர்வே எண்.457/8 கால்வாய் உள்ளது என்றும், ஆகவே பழனிவேல் நடராஜன் ஆகியோர்தான் எனக்கு பாசம் வரும் கால்வாயை அழித்துவிட்டார்கள் என்றால் இல்லை.

6. எனது வயலில் எனது தேவைக்கு தண்ணீர் எடுத்துக்கொள்ள உரிமை உள்ளது என்றால் சரிதான். அதேபோல் வாதி அவர் வயலில் தண்ணீர் எடுத்துக்கொள்ள கால்வாய் எடுத்துக்கொண்டதில் நான் உரிமை கொண்டாட முடியாது என்றால் சரியல்ல. தாவா 3 அயிட்ட சொத்துக்களும்

சர்கார் வாய்க்காலுக்கு மேற்கு, வடக்கு, ஆகிய திசைகளில் தாவா சொத்துக்கள் உள்ளதாக சொல்லியுள்ளார்கள் என்றால் சரியல்ல. எனக்கும், வாதிக்கும் இடையே வாய்க்கால் தகராறு இருப்பதாகவும் அதனை தீர்க்கும்படி வட்டாட்சியரிடமும், கோட்டாட்சியரிடமும் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பும், அல்லது பின்பும் மனு கொடுத்தேனா என்றால் இல்லை. வாதி சொத்தினை அபகரிக்க வேண்டி இடையூறு செய்தேனா என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.11.07 18:51:27 +0530

District Munsif
Mannargudi.